செய்தி வெளியீடு எண். 45-2017 நாள்: 26.01.2017

## விழுப்புரம் மாவட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளில் குடியரசு தினத்தையொட்டி, இன்று (26.01.2017) கிராமசபை கூட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் கண்டமானடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார்.

*****

விழுப்புரம் மாவட்டம் 1099 கிராம ஊராட்சிகளில் குடியரசு தினத்தையொட்டி, இன்று (26.01.2017) கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு குடிநீர் விநியோகம், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், சுகாதாரப் பணிகள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை பராமரித்தல், ஒவ்வொரு வீட்டிலும் தனிநபர் கழிப்பறை கட்டுதல், மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து, மக்கும் குப்பையை முழுமையாக சேகரித்து, மக்கவைத்து விவசாயத்திற்கு பயன்படுத்துதல், நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் வழங்குதல், மேலும் கிராமத்தில் உள்ள அனைத்து பள்ளிக் குழந்தைகளும் பயன்பெற விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைக்கவும், கிராமத்தில் புதிய சாலைகளை அமைத்துக் கொடுக்கப்படும் என்பவை உள்ளிட்ட தீர்மானங்கள் இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டது.

கிராம சபைக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

மக்கள் சுகாதாரமாக இருக்க வேண்டும் என்பதற்காக, தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை ஊரக சுகாதாரத்துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களை தீட்டி, செயல்படுத்தி வருகிறது. முக்கியமாக, தனிநபர் கழிப்பறை கட்ட ரூ.12,000/- அரசு மானியமாக வழங்கி வருகிறது. மக்கள் இதனை பயன்படுத்தி அனைத்து வீடுகளிலும், வருகின்ற மார்ச் மாதத்திற்குள் ஒவ்வொரு வீட்டிலும், தனிநபர் கழிப்பறையைக் கட்டி பயன்படுத்த வேண்டும் என்றும், நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களின் எடையை குறையாமல் வழங்கப்படுகிறதா எனவும், அனைத்து வேலை நாட்களிலும் நியாயவிலைக் கடை திறந்து, பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்யப்படுகிறதா என மாவட்ட வழங்கல் அலுவலர் கண்காணிக்க வேண்டுமெனவும், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்து அவர்களுக்கு தமிழக அரசு நிதி ஒதுக்க பரிந்துரை செய்ய, துறைவாரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கிராம சபை கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சரயு,இ.ஆ.ப., திட்ட அலுவலர் ஊரக வளர்ச்சி முகமை (பொ) திரு.ஆனந்தராஜ், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.ராமதாஸ், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) திருமதி.சௌண்டம்மாள், திரு.ஜெமினி, விழுப்புரம் வட்டாட்சியர் திரு.வெற்றிவேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கணேசமூர்த்தி, திரு.நாராயணன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.